110

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27.08.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் விதி 110 –இன் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் ஒன்றான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகள் துவங்க ரூபாய் 4 கோடியே 40 இலட்சம் நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (சிஉதி–1) துறை

அரசாணை (நிலை) எண்.3

நாள் :06.01.2016.
திருவள்ளுவர் ஆண்டு 2046.
மார்கழித் திங்கள் 21–ஆம் நாள்.

படிக்க :

இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை–5 அவர்களின் கடிதம் ந.க.எண்.த3/22743/2015, நாள்.14.09.2015.

---

ஆணை:-

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 27.08.2015 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் விதி 110-இன் கீழ் மற்ற இனங்களுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

"பணிபுரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் தங்கள் பணி காரணமாக இருப்பிட மாவட்டங்களையும், குடும்பங்களையும் விட்டு பிற மாவட்டங்களுக்குச் சென்று தங்கி பணிபுரியும் போது பாதுகாப்புடனும், கவலையின்றியும், தங்கிப் பணிபுரிவதற்கு ஏதுவான மகளிர் விடுதிகள் துவங்குவது அவசியமாகும்.

எனவே, முதற்கட்டமாக சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகள் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் துவங்கப்படும்.

2. மேற்காணும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக மேலே படிக்கப்பட்ட கருத்துருவில் ஆதிதிராவிடர் நல இயக்குநர் பணிபுரியும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் அரசு வேலை மற்றும் இதர துறைகளில் வேலை கிடைத்து பணிபுரிவதற்காகவும் பணியிட மாறுதல் காரணமாகவும் செல்லும் இச்சமூகத்தைச் சார்ந்த பெண்கள் தனது இருப்பிட மாவட்டத்தை விட்டும் குடும்பத்தையும் விட்டு பிற மாவட்டங்களுக்குச் சென்று அங்கு தங்கி பணிபுரிய

(த.தி.பா)..

வேண்டியுள்ளது என்றும் இவ்வாறு மாற்றலாகி வரும் பெண்கள் பாதுகாப்பு கருதியும் கவலையின்றி தங்கி பணிபுரியவும் ஏதுவாக மகளிர் விடுதி கட்ட வேண்டியது மிகவும் அவசியமாகிறது என்றும் இவ்விடுதி கட்டடத்தின் தரைத் தளத்தில் காப்பாளர் அறை மற்றும் நான்கு பேர் தங்கும் வகையில் 13 அறைகள் வடிவமைத்து அனைத்து அறைகளுக்கும் நவீன சமையலறை, குளியலறை மற்றும் கழிவறை வசதிகள் ஏற்படுத்தி ஒரு விடுதி கட்ட ரூ.110 இலட்சம் (ரூபாய் நூற்றிபத்து இலட்சம்) செலவாகும் என்றும் சென்னை (அல்லது) காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் பணிபுரியும் மகளிருக்கான புதிய விடுதிகள் 4 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் துவங்கிடவும், மேற்காணும் கட்டட பணியை மேற்கொள்ள தாட்கோ மேலாண்மை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கி உரிய ஆணை வழங்குமாறும் அதற்காக தேவைப்படும் ரூ.4.40 கோடி நிதியினை விடுவிக்குமாறும் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில், பணிபுரியும் மகளிருக்கான விடுதி துவங்க ரூ.4.40 கோடி (ரூபாய் நான்கு கோடியே நாற்பது இலட்சம் மட்டும்) நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத் தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> **"4225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் குறித்த மூலதன செலவு – 01 ஆதிதிராவிடர் நலன் – 277 கல்வி – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II மாநில திட்டம் JA ஆதிதிராவிடர் மாணவர் இல்லங்கள் கட்டுதல் 16 பெரும்பணிகள் (கு.தொ.கு 4225 01 277 JA 1603)"**

5. மேலே பத்தி 3 –இல் நிர்வாக ஒப்பளிக்கப்பட்ட செலவினம் " ஒரு புதுப்பணி" குறித்த செலவினமாகும். இதற்காக சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்ற பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதலில் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ஒப்பளிப்பு செய்யப்படுவதன் மூலம் செலவிடப்படலாம். இதற்கான ஆணைகள் நிதி(வ.செ. பொது–1) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாகப் பெற உரிய படிவத்தில், இவ்வாணையின் படிகளை இணைத்து நிதி(வ.செ.பொது–1)துறைக்கு விண்ணப்பிக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினம் மீது சட்டப் பேரவையின் ஒப்புதல் பெறும் பொருட்டு **2015–2016** ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்த்திட ஏதுவாக உரிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி(ஆதி(ம)பந)துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய 5 இடங்களில் பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் துவங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மேலும் விடுதிகள் கட்ட சரியான இடங்களை தெரிவு செய்து மகளிர் விடுதிக்கான கட்டுமானப் பணிகளை தாட்கோ மேலாண்மை இயக்குநரிடம் ஒப்படைக்குமாறும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார். கட்டுமானப் பணிகளை குறித்த கால வரம்பிற்குள் முடிக்க கால

அட்டவணை ஒன்றினை தாட்கோ நிறுவன மேலாண்மை இயக்குநருடன் கலந்து தயார் செய்யும்படி ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். கட்டட கட்டுமானப் பணியின் முன்னேற்றத்தினைக் கண்காணிக்கவும், குறிப்பிட்ட காலவரம்பிற்குள் கட்டடங்களை கட்டி முடித்து ஆதிதிராவிடர் நலத்துறையிடம் தாட்கோ ஒப்படைப்பதை உறுதி செய்யும்படியும் ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் முன்னேற்ற அறிக்கை மாதந்தோறும் அரசுக்கு அனுப்பப்படவேண்டும். கட்டுமானப் பணிகள் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடங்களுடன் ஒத்திருப்பதையும், அவற்றின் தரத்தினையும் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சாரா குறிப்பு எண்.69700/நிதி(ஆதி(ம)பந)துறை 2015-1, நாள்.31.12.2015இல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேட்டு எண்.1833 (ஆயிரத்து எண்ணூற்று முப்பத்து மூன்று).

//ஆளுநரின் ஆணைப்படி//

ப. அண்ணாமலை,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை- 5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-18.
மாநிலக்கணக்காயர், சென்னை-9/18.
மாவட்ட ஆட்சித்தலைவர்கள்(சென்னை/காஞ்சிபுரம்/ திருவள்ளூர்/ கோயம்புத்தூர்/திருச்சி)
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள். (சென்னை/காஞ்சிபுரம்/ திருவள்ளூர்/ கோயம்புத்தூர்/திருச்சி)
மாவட்ட கருவூல அலுவலர்கள். (சென்னை/காஞ்சிபுரம்/ திருவள்ளூர்/ கோயம்புத்தூர்/திருச்சி)
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-8.
நகல்
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
அமைச்சர் (நிதி மற்றும் பொதுப்பணி) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நிதி (ஆதி(ம)பந / (வ.செ.பொ.II/ வ.செ.பொ.I) துறை, சென்னை-9.
அரசு செயலரின் முதுநிலை தனிச் செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந.2/ஆதிந.4/ஆதிந.5/சிஉதி(2)/அநமு-1)த்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
7-1-16